2026 –பிப்ரவரி மாதம் 10–ஆம் தேதி செவ்வாய்கிழமை.
தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பெரம்பலூர்.

*எம்.சி.ஓ.பி. நெம்பர் : 72/2024*

*2026–ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 10– ஆம் தேதி செவ்வாய்கிழமை மனுதாரர்/எதிர்மனுதாரர் தரப்பு சாட்சியாகிய P W 1, வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டின் 54–வது விதியின் 9 –வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திருமதி. K. மனோரஞ்சிதம்,* Gr.II Bench Clerk *அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.*

| | | |
|---|---|---|
| பெயர் | : | PW 1 சேகர் |
| தந்தையார் பெயர் | : | மருதை |
| ஊர் | : | பெருமத்துார் குடிகாடு |
| வட்டம் | : | குன்னம் |
| மாவட்டம் | : | பெரம்பலூர் |
| தொழில் | : | ஆலத்துார் ஊராட்சி ஒன்றிய துணை வட்டார வளர்ச்சி அலுவலர் |
| வயது | : | 55 |

<u>தேதி: **10.02.2026**</u>

**<u>முதல் விசாரணை:–</u>**

நான் இந்த மனுவில் மனுதாரர் ஆவேன். நான் மனுதாரர் இருந்து எனது நிரூபண வாக்குமூலத்தை தாக்கல் செய்கின்றேன். அதில் கண்டுள்ள சங்கதிகள் உண்மையானவை என்றும், அவை என்னால் சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு எனக்கு படித்து காண்பிக்கப்பட்டது என்றும், அவற்றை நான் சரியென்று ஒப்புக்கொண்டு அதில் கையெழுத்து செய்துள்ளேன் என்றும், பிரமாணத்தின் பேரில் உறுதியளிக்கின்றேன்.

**<u>எனது சார்பாக:–</u>**

1). 02.02.2024–ம் தேதியன்று நடைபெற்ற விபத்து தொடர்பாக பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையின் உண்மை நகலை தாக்கல் செய்கின்றேன். அது **ம.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகின்றது.

2) 02.02.2024 முதல் 06.02.2024 தேதி வரை நான் சிகிச்சை எடுத்துக்கொண்ட SPT மருத்துவமனையின் மருத்துவ விடுப்புச் சான்றிதழை தாக்கல் செய்கின்றேன். அது **ம.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

3) 23.06.2025 முதல் 25.06.2025 தேதி வரை நான் சிகிச்சை எடுத்துக்கொண்ட SPT மருத்துவமனையின் மருத்துவ விடுப்புச் சான்றிதழை தாக்கல் செய்கின்றேன். அது **ம.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

4) SPT மருத்துவமனையில் சிகிச்சைக்காக செலுத்தப்பட்ட மருத்துவ கட்டண ரசீதுகள் (எண்ணிக்கை – 60) தாக்கல் செய்கிறேன். அது **ம.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

5) 2024 –ம் ஆண்டு ஜனவரி மாதத்திற்கான எனது ஊதியச்சான்றிதழின் இணைய நகலை தாக்கல் செய்கின்றேன். அது **ம.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**( மேற்படி ம.சா.ஆ.4 சான்றாவணம் 2–ஆம் எதிர்மனுதாரர் தரப்பு வழக்கறிஞரின் ஆட்சேபனைக்குட்பட்டு குறியீடு செய்யப்படுகிறது)**

மனுப்படி உத்தரவாக வேண்டுகின்றேன்.

**<u>2-ஆம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை:–</u>**

விபத்து நடைபெற்ற சாலை நெடுங்சாலை என்றால் சரிதான். விபத்தில் என் மீது மோதியதாக சொல்லப்படும் வாகனம் எனக்கு பின்னால் வந்த வாகனம் என்றால் சரிதான். நான் நின்று கொண்டிருந்தபோது எனக்கு பின்னால் வந்து வாகனம் மோதியதால் மேற்படி வாகனம் எப்படி வந்து மோதியது என்று எனக்கு தெரியாது என்று சொன்னால் சரிதான். அந்த நேரத்தில் எனக்கு எதிர்புறத்தில் எந்த வாகனமும் வரவில்லை என்றால் சரிதான். விபத்து சாலையில் மைய பகுதியில் நடைபெற்றது என்று சொன்னால் சரியல்ல. நான் இருசக்கர வாகனத்தில் செல்லும்போது திடீரென்று வாகனத்தை நிறுத்தியதால் தான் விபத்து ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல. நான் பின்னால் வரும் வாகனத்ததை கவனித்து முறையாக சைகை செய்து எனது வாகனத்தை நிறுத்தி இருந்தால் இந்த விபத்து நடைபெற்று இருக்காது என்று சொன்னால் சரியல்ல. நான் விபத்து நடைபெற்றவுடன் SPT மருத்துவமனையில் சிகிச்சைக்கு

சேர்ந்தேன். மேற்படி விபத்திற்கு என்னுடைய கவனக்குறைவு காரணம் என்பதால் தான் மேற்படி விபத்துக்குண்டான விபத்துப்பதிவேட்டை தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் மருத்துவக் காப்பீடு பெறுவதற்காக அசல் கட்டண ரசீதுகளை தாக்கல் செய்துவிட்டதால் அசல் ஆவணங்களை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான். மேற்படி மருத்துவமனையானது காப்பீட்டு அட்டவணையில் சேர்க்கப்படாததால் காப்பீடு எதுவும் எனக்கு கிடைக்கவில்லை. நான் மருத்துவ காப்பீட்டு தொகை பெற்றுக்கொண்டேன் என்றும் வழக்கிற்காக காப்பீட்டு தொகை கிடைக்கவில்லை என்றும் பொய்யாக சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. நான் மீண்டும் பணியில் சேர்ந்து பணிபுரிந்து வருகிறேன். விபத்துக் காயங்களால் எனக்கு உடலளவில் எவ்வித மாறுபாடும் இல்லை என்று சொன்னால் சரிதான். எனக்கு 6 மாத கால வருமான இழப்பு ஏற்பட்டது என்பதற்கு ஆவணங்கள் எதனையும் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். நான் தொடர் சிகிச்சை எடுத்துக்கொண்டதற்குண்டான ஆவணங்கள் எதனையும் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். எனக்கு ஏற்பட்ட விபத்து காயங்கள் அனைத்தும் பூரண குணமாகிவிட்டது என்றும். எனக்கு வருமான இழப்பு எதுவும் இல்லை என்று சொன்னால் சரிதான். விபத்து சமயத்தில் 1-ம் எதிர்மனுதாரரின் வாகனத்ததை ஓட்டிய ஓட்டுநருக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்பதால் எனக்கு 2-ம் எதிர்மனுதாரரின் காப்பீட்டு நிறுவனம் இழப்பீடு கொடுக்க கடமைபட்டதில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் கோரியுள்ள இழப்பீடு அதிகமானது என்றும் என்னுடைய மனு தள்ளுபடி செய்யத்தக்கது என்றும் சொன்னால் சரியல்ல.

<u>மறுவிசாரணை:- இல்லை.</u>

**ஒப்பம்/-கி.முரளிதரக்கண்ணன்,**
**தலைமை நீதித்துறை நடுவர்,**
**பெரம்பலூர்.**